# குடி கெடுக்கும் கள்



9531
No.
12 AUG
MADRAS
CH
0--, 3MRC, K
N29
183554

... அணா ஒன்று.

# கள் வந்த கதையும்

## வேறு சிறு கதைகளும்

சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியன்
எழுதியவை

“கெடுப்பதொழி”

மூன்றாம்பதிப்பு

காந்தி ஆசிரமம்
புதுப்பாளையம், திருச்செங்கோடு.

சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது—1929.

# இதிலடக்கம்


| | |
|---|---|
| | பக்கம். |
| குழந்தைகள் பேச்சு ... ... ... | 5 |
| தலைகீழ் நியாயம் ... ... ... | 9 |
| பானைக்கும், சீசாவுக்கும் சம்பாஷணை ... | 14 |
| கள் வந்த கதை ... ... ... | 18 |
| கலால் வருமானம் ... ... ... | 34 |

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

[ஒருவன் இலக்ஷுமியால் நீக்கப்பட்டான் என்பதற்கு அறிகுறி, அவன் விருப்பம் விலைமகளிர், கள், சூதாட்டம் இவற்றின்மீது செல்வதேயாகும்.]

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

[கள்ளுண்பது விலைகொடுத்து மெய்மறப்பை வாங்குவதாகும். இந்த அறியாமைக்குக் காரணம் முன்பிறப்பில் செய்த பாவமே.]

திருவள்ளுவர் குறள்.

# குழந்தைகள் பேச்சு

## கரிசில்பாளையம்

கார்த்திகை இரவு : ஐந்து நாழிகைப்பொழுது.

[சுப்பனும் பாவாயியும் தங்கள் வீட்டிலிருந்து தெருவுக்கு வருகிறார்கள்: சுப்பனுக்கு 12 வயது. பாவாயி 8 வயதுப் பெண். முருகன் (10 வயதுச் சிறுவன்) பக்கத்து வீட்டுத் திண்ணைமேல் நிற்கிறான். பாவாயி கண்ணைத் துடைத்துக்கொண்டு வருகிறாள்.]

**முருகன் :**—எங்கேடா போகிறீர்கள்? இந்நேரத்தில் என்னடா வெளியே கிளம்புகிறீர்கள்? சோளக்காட்டுக்குக் காவலுக்குப் போகிறீர்களா?

**சுப்பன் :**—ஐயோ! குடிச்சுப்போட்டு எல்லாரையும் அடிக்கிறான்!

**முருகன் :**—யார்! உங்கள் சித்தப்பனா?

**சுப்பன் :**—ஆமாமடா, வேறு யார்? இன்று ஜாஸ்தி வெறி, பயமாயிருக்கிறதடா!

**பாவாயி :**—ஐயோ! அம்மாளைத் தொப்பு தொப்பென்று அடித்துக் கொல்லுகிறானே!

**சுப்பன் :**—நான் இன்று உள்ளே போகமாட்டேன்; என்னையும் அடித்துப்போடுவான்.

[வாசலில் உட்கார்ந்துகொள்கிறான்.]

சோறு இல்லாமல் போனால் போகுது. இரவெல்லாம் இங்கேயே இருந்து விடுகிறேன். வீட்டுக்குள் போக பயமாயிருக்கிறது!

[பாவாயி அழுகிறாள்.]

முருகன் :—அழாதே, பாவக்கா! அப்படித்தான் நடக்கும். இதற்கென்ன அழுகிறது! அழாதே, நான் சொல்லுவதைக் கேள்.

பாவாயி :—நான் மிட்டாதாரனு யிருந்திருந்தால், சித்தப்பனுக்குக் கள் கொடுக்கும் பாவிகளை யெல்லாம் பிடித்து ஜெயிலில் போட்டு மூடிவிடுவேன். கள்ளை எங்கும் விற்காமல் உத்தரவு போட்டுவிடுவேன்!

முருகன் :—பைத்தியக்காரி! மிட்டாதாரன் என்ன செய்யலாம்? மிட்டாதாரனுக்கு மேல் இராஜா இருக்கிறுன்.

பாவாயி :—இராஜாதான் ஆகட்டுமே! ஏன் அவன் கள் விற்கிறவனைக் கண்டுபிடித்து ஜெயிலில் பிடித்துப் போட்டுவிடக் கூடாது?

முருகன் :—ஆ! அப்படியா? இராஜாதானே சாராயமும் கள்ளும் விற்கிறுர்! இது உனக்குத் தெரியாதா? வேறே யாராவது கடை வைத்தால் இராஜாவுக்கு ஆதாயம் குறையுமென்று அவரே விற்கிறுர்.

பாவாயி :—சீசீ! பொய் சொல்லாதே. இராஜா எங்கேயாவது கள் விற்பாரா?

முருகன் :—நான் சொல்வது பொய்யா? நீ வேண்டுமானுல் யாரையாவது கேள். என் மாமன் பழனிக் கவுண்டனை ஏன் பிடித்துப்போனுர்கள், தெரியுமா? மாரியம்மன் திருவிழாவில் சாராயம் காய்ச்சி விற்றுன். அதனுல் இராஜாவுக்கு ஆதாயம் குறைந்துபோயிற்று. அவனைப் பிடித்து ஜெயிலில் வைத்திருக்கிறுர்கள்.

பாவாயி :—அப்படியா! உங்கள் மாமன் என்னவோ குற்றம் செய்தான், சேவகர்கள் பிடித்துப் போனுர்கள் என்றல்லவோ சொன்னுர்கள்.

முருகன் :—ஆமாம்! சாராயம் விற்றுன். இராஜாவினுடைய வியாபாரம் கெட்டுப்போயிற்று. அது குற்றம்தானே! பிடித்துப் போய் ஜெயிலில் வைத்திருக்கிறுர்கள்.

சுப்பன் :—நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. இப்படி இராது, முருகா! நாளை வாத்தியாரைக் கேட்கலாம். அவருக்குத் தெரியுமல்லவா?

முருகன் :—சரி, சரி, அவரைக் கேட்கலாம்.

## கிராம பள்ளிக்கூடம்.

### மறுநாள் காலை.

[வாத்தியார் திண்ணைமேல் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்; மாணவர்கள் ஒவ்வொருவராய் வந்து உட்காருகிறார்கள்.]

சுப்பன்:—(வாத்தியாரிடம் மெள்ளப் போய்) ஐயா! வாத்தியார் ஐயா! யாரோ ஒரு பயல் சொல்லுகிறான், அது உண்மையா சொல்லுங்கள்! நம் இராஜா கள் விற்கிறாராமே! அதற்காகத்தான் குளத்துக்காட்டுப் பழனிக் கவுண்டனை ஜெயிலில் போட்டிருக்கிறார்களாமே! இது பொய்தானே?



சுப்பன் வாத்தியாரைக் கேட்கிறான்: "நம்ம இராஜா கள் விற்கிறார்களாமே!"

வாத்தியார்:—இதென்ன பைத்தியக்காரக் கேள்வி? யார் உனக்கு இப்படிக் கதை சொன்னது? அறியாத பயல்! இராஜாவாவது சாராயம், கள் விற்கவாவது! இராஜா ஒருவிதக் கடையும் வைத்திருப்பது கிடையாது. இராஜாக்கள் வியாபாரமா செய்வார்

கள்? இல்லவே யில்லே. பழனிக் கவுண்டன் லேஸென்ஸில்லாமல் சாராயம் காய்ச்சி விற்ருன். சர்க்கார் வருமானம் அதனுல் கெட்ட தற்காக அவன் தண்டனே யடைந்தான்.

சுப்பன் :—அதெப்படி? சாராயம் இவன் விற்றதால், சர்க்கார் வரும்படி ஏன் குறைந்து போகும்? எல்லாரும் கந்தாயம் சரியாய்க் கட்டுகிருர்களே!

வாத்தியார் :—சாராயத்துக்கு ஒரு வரியுண்டு; ஒரு பீப்பாய் சாராயம் காய்ச்ச என்ன செலவு பிடிக்குமோ அதற்குமேல் ஒரு வரி சர்க்காருக்கும் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துவிட்டு, அந்த வரியையும் சாராயத்தின்மேல் போட்டு விற்பார்கள். கள்ளுக்கும் அப்படியே ஒரு வரி உண்டு. இந்த வரி சர்க்காருக்கு ஒரு பெரிய வருமானம். பூமிக்குக் கந்தாயம் போட்டு வசூல் செய்கிற மாதிரி இதுவும் ஒரு வருமானம்; நம்முடைய சர்க்காருக்குக் கள், சாராயம், அபினி இவைகளின்மேல் கோடி கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

சுப்பன் :—(தன் சித்தப்பனே நினேத்துக்கொண்டு) அப்படியானுல் ஜனங்கள் குடிக்கக் குடிக்க, சர்க்காருக்கு அதிக வருமானமா?

வாத்தியார் :—ஆமாம்; இந்தக் கள், சாராய வருமானம் சர்க்காருக்கு இல்லாவிட்டால், பட்டாளம், போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளங்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் ஒன்றும் சர்க்கார் நடத்த முடியாது.

சுப்பன் :—இதெல்லாம் அவசியமானுல் ஏன் அவைகளுக்காக நேராய் வரி கொடுக்கச் சொல்லக்கூடாது? கள் குடிக்கச் சொல்லி அதில் ஒரு பாகம் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? இதென்ன அநியாயம்!

வாத்தியார் :—(சிரித்துக்கொண்டு) அநியாயமா! அதுதான் சட்டம். உனக்கு இதெல்லாம் இப்போது தெரியமாட்டாது. எல்லாப் பிள்ளேகளும் வந்துவிட்டார்கள்; பாடங்கள் ஆரம்பிக்கலாம்.

# தலைகீழ் நியாயம்

இடம்:—அரண்மனை வாயில்

நன்செய் :—என்ன தம்பி, எங்கே வந்தாய்?

புன்செய் :—அண்ணே, அரசனிடம் முறையிட வந்தேன்.

நன் :—என்ன செய்தி?

புன் :—மழை யில்லை, வரி கொடுப்பது கஷ்டமாயிருக்கிறது.

நன் :—உன் யோக்கியதை எப்போதும் தெரிந்ததுதானே. எப்போதும் வானம் பார்த்து வாழ்பவன் நீ. உன் தரித்திரம் எப்போதும் நீங்காது. உனக்கு வரி குறைக்கமாட்டார்கள். ஏன் வீணாய் இங்கே தாமதிக்கிறாய்? புன்செய்க்கு வரி வஜா கிடையாது.

புன் :—ஆனால் உபயோகமில்லையா!

நன் :—இல்லை தம்பி, நீ ஊருக்குத் திருப்பிப்போ; உன் வேலையைப் பார். மழையில்லாவிட்டால் இராட்டை எடுத்துக் கொள். [கள் வருகிறது.]

கள் :—நண்பர்களே, நமஸ்காரம்! என்ன, இராட்டைப் பேச்சு! அது ராஜத் துரோகம்! இராட்டைப் பேச்சு வேண்டாம். நம்முடைய இராஜா நன்றாயிருக்கிறாரா?

நன் :—நீ யார் ராஜாவை விலைக்கு வாங்கினவன்? நாட்டைக் கெடுக்கும் போக்கிரிக்கு இராஜாவினுடைய க்ஷேமவிசாரணையா?

கள் :—நன்செயப்பரே! ஏன் இவ்வளவு கோபம்? இராஜாவுடைய ஸ்ரீமுகம் கிடைத்ததின் காரணம், நான் அவரைப் பார்க்க வந்தேன். சபைக்கு என்னைக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

நன் :—சீ, சீ, தூரப் போ!

புன் :—தூரப் போ!

நன் :—இராஜாவின் ஸ்ரீமுகமா? கிட்ட நெருங்காதே?

கள் :—கோபஞ் செய்யாதீர்கள். உங்களுக்கு ஏன் என்னிடம் இவ்வளவு அலட்சியம்? இராஜாவுக்கு நான் உங்களைப்போல் வருமானம் தரவில்லையா?

நன் :—குடியனுக்கு எவ்வளவுக்கு ஆய்விட்டது! என்ன நீ அரசனுக்குக் கட்டுவது? சொல்.

கள் :—ஐயா! தாங்களும் தங்களுடைய கந்தலாடைத் தம்பியாரும் இருவரும் சேர்ந்து அரசனுக்கு என்ன கட்டுகிறீர்கள்?

புன் :—இவன் விசாரணையைப் பார்! நாம் கட்டுவதில் பத்தில் ஒரு பங்கு இவன் கட்டமுடியுமா? நாடு பூராவும் கணக்குப்பிள்ளை சோதித்து வயல் தவருமல் வசூல் ஆகிறது. குடிகாரனுக்கு எங்களுடன் போட்டி. அரண்மனைக்கு வந்துவிட்டான்.

கள் :—இவ்வளவு கோபம் வேண்டாம். ஏதோ பழைய காலத்துப் பேச்சு பேசுகிறீர்கள்! நீங்கள் தூங்கிவிட்டீர்கள்போல் இருக்கிறது. இது ஹிந்து ராஜாங்கமென்று நினைக்கிறீர்களா? இல்லை, அக்பர் அரசாட்சியா? இது வெள்ளைக்கார ராஜ்ஜியம் தெரியாதா? என் பணமில்லாமல் போனுல் அரசியல் நடக்குமா?

நன் :—இவன் பெரு முரடன்! புத்தியைப் பார்! அடே, கள்ளா! சென்ற வருஷம் நானும் என் தம்பியும் கஜானுவில் 7 கோடி ரூபாய் கட்டினேம். அரசாங்கத்தைத் தாங்கும் தூண்கள் என்ற பட்டம் எங்கள் குடும்பத்திற்கு ஆதிநாள் முதல் இது வரையில் இருந்துவந்திருக்கிறது. ராஜசபையில் எங்களுக்குத் தனி யிடம்: ஹிந்து ராஜ்ஜியத்திலும்தான்; அக்பர் ஆட்சியிலும் தான்; ஆங்கில அரசாட்சியிலும் அப்படி.

கள் :—ஆம்! ஆம்! தாங்கள் பெரிய தூண்கள்தான். ஆனுல் நானும் ஏதோ சிறு பிச்சை, 5 கோடி சென்ற வருஷம் கட்டினேன்.

நன் :—இதென்ன விபரீதம்! நாங்கள் கட்டுவது 7 கோடி, இவன் கட்டுவது 5 கோடியா?

புன் :—பொய்! சுத்தப் பொய்!

கள் :—எஜமானர்களே! இதென்ன ரசீதல்லவா? பாருங்கள், 5 கோடி என்றிருக்கிறதா, இல்லையா?

நன் :—5 கோடி உண்மைதான். அரசாங்க முத்திரைதான். உனக்கேது இவ்வளவு பணம்? எங்கிருந்து கொள்ளை யடித்தாய்?

புன் :—சோற்றுக்குக்கூடத் திண்டாடும் குடிகாரப் பயல்கள்! கடன்காரர்களை ஏமாற்றித்திரியும் படுபாவிகள்! மனைவி மக்களை யடித்து முக்காடு போட்டுக்கொண்டு கள் கடைக்குப் போய்க் குடித்துப் போடும் கூலிக்காரர்கள்! இவர்களிடமிருந்து இவ்வளவு பணம் பிடுங்கினையா?

கள் :—ஆம்! ஆம்! அவர்கள் பணம்தான் $5\frac{1}{2}$ கோடி கஜானாவில் கட்டினேன். இது நம்முடைய இராஜதானியின் கணக்கு மாத்திரம்; தேசமெல்லாம் கணக்கிட்டால் இருபது கோடியாகும். கஜானாவில் கட்டினது போக கடைக்காரர்களுக்கும் ஏராளமாகக் கொடுத்தேன். தோப்புக்காரர்களுக்கும் கொடுத்தேன். இன்னும் கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்தேன். எனக்கென்ன பணத்தைப்பற்றி கவலை? ராஜா உத்திரவு ஒன்றிருந்தால் போதும். என் குடிகள் உங்கள் குடிகளைப்போலல்ல. நான் கேட்டதை இரண்டாம் பேச்சில்லாமல் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். மனைவியை அடித்துத் தாலியை விற்றுவது கொண்டுவந்து கொட்டுகிறார்கள். இன்னும் வேண்டுமானல், உங்களுக்கும் பணம் தருகிறேன். என்மேல் துவேஷம் வையாதீர்கள்.

நன் :—போதும், போதும், உன் பணமும் எங்களுக்கு வேண்டாம், உன் பழக்கமும் வேண்டாம்.

கள் :—ஏன் என்மேல் இவ்வளவு பகை! அதோ பாருங்கள், உங்களைவிடப் பெரிய தலைப்பாகை போட்டுக்கொண்டு ஒருவர் மோட்டாரில் வருகிறார்.

[வருமானவரி வருகிறது.]



வருமானவரி : " என்ன குடியானவர்களே ! சுகமா ? "

வருமானவரி :—என்ன குடியானவர்களே ! சுகமா ? மழை இல்லையா ? நெல் எப்படி விலை ? கொஞ்சம் ஏற்றம்தானே ? ராஜ தரிசனத்திற்கு வந்தீர்களா ? வெளியே வருவார் ; அப்போது பார்க்கலாம். தூர நில்லுங்கள், என் மோட்டார் வண்டி திரும்ப வேண்டும்.

நன் :—தாங்கள் யாரோ தெரியவில்லையே !

வருமானவரி :—ஹா ! ஹா ! என்னைத் தெரியாதா ? பாவம் ? நாட்டுப்புறக்காரர் ! நீங்கள் எந்த ஜில்லா ? நான் எப்போதும் ராஜசபையிலிருப்பேன். எந்த வேலையையும் மந்திரி என்னைக் கேட்டுத்தான் செய்வார். அடே யாரடா, வாயில் காப்போன் !

வாயில் காப்போன் :—ஐயா ! வணங்குகிறேன்.

[வருமானவரி உள்ளே போகிறது.]

கள் :—(நகைத்துக்கொண்டு) பார்த்தீர்களா நன்செயப்பனே, புன்செயப்பனே ! உங்கள் பழைய பட்டம் என்னத்திற்கு ஆயிற்று ? இந்த ஆசாமியின் வண்டியும் ஜரிகை உருமாலையும்

எவ்வளவு தடபுடல்! ஆனால் அரசனுக்குத் தருவது இரண்டு கோடிகூட இல்லை. படாடோபமோ அளவில்லை. அவன் உள்ளே போகிறான். நீங்கள் நாட்டைத் தாங்கும் தூண்கள் வெளியே நிற்கிறீர்கள். வாயிற்காப்போன் உங்களைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

நன் :—வருமானவரி, வருமானவரி என்று எல்லாரும் பேசிக்கொள்ளுகிறார்களே, இவர்தானா? இரண்டு கோடிதானா இவர் ராஜாவுக்குக் கொடுக்கிறது?

கள் :—அதுகூட இல்லை. இதோ பாருங்கள் கணக்கு. சென்னை வருமானவரி 196 லக்ஷம் அதாவது இரண்டு கோடிக்கும் குறைவு. 10 வருஷத்துச் சராசரி பார்த்தால் ஒரு கோடிகூட இல்லை. கட்குடியர்கள் $5\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். ராஜ்ஜியம் யாருடையது சொல்லுங்கள். நானல்லவோ ராஜ சபைக்குத் தலைவனாக இருக்கவேண்டும்?

புன் :—அண்ணே! போகலாம், வா. இது தலைகீழ் நியாயமாயிருக்கிறது! எல்லாம் கலிகால விசேஷம்!

# பானைக்கும் சீசாவுக்கும் சம்பாஷணை

பானை (கள்) :—தம்பீ! வா, சுகமா?

சீசா (சாராயம்) :—தம்பி எனக்கென்ன? கொண்டாட்டம் தான்!

சீசா :—கொஞ்சநாள் இந்தக் காந்திக் கிழவன் தொந்தரவால் கஷ்டமா யிருந்ததல்லவா?

பானை :—ஆம்; இப்போது அதெல்லாம் கிடையாது; நம்முடைய ஆக்கம் வலுத்துவிட்டது.

சீசா :—இப்போதும் ஏதோ நம்மைத் துரத்திவிடுவதாகப் பேசிக்கொள்ளுகிறார்களே?

பானை :—நானும் கேள்விப்பட்டேன்; அதெல்லாம் வீண் பேச்சு. நமக்கு என்ன பயம்? சர்க்காருடைய கோட்டையில் ஒரு மூலையை நமக்கென்றே விட்டிருக்கிறார்கள். யாரும் நம்மை அசைக்க முடியாது.

சீசா :—அப்படியல்ல, அண்ணே! எங்கே பார்த்தாலும் நம்மை ஒழிப்பதே பேச்சு. நமக்குக் கஷ்டம் வரும்போல் தோன்றுகிறது.

பானை :—ஆறு கோடி கப்பம் ராஜாவுக்கு நாம் கட்டுகிறோம். எந்த ஜமீன்தாரன் எங்களுக்குச் சமானமாவான்? நம்மை யார் என்ன செய்யமுடியும்? அரசனுடைய சோறு தின்பவர்கள் எல்லாரும் நமக்குத் துணையாய் நிற்பார்கள்.

சீசா :—ஏனோ எனக்குப் பயமாய்த்தா னிருக்கிறது, அண்ணே!

பானை :—பயப்படாதே, தம்பீ! உன்னைத் துரத்தினாலும் என்னைத் துரத்த மாட்டார்கள்; நான் உன்னைக் காப்பாற்றுவேன்.

ஏழைகள் வீட்டிலிருந்து கொள்ளையடித்த பணத்தில் ஒரு பாகம் அரசனுக்குக் கொடுத்து வருகிறோம். அவன் நம்முடைய கைக்குள் சிக்கிவிட்டான். நமக்கு ஒரு பயமுமில்லை. நீ என் கவலைப் படுகிறாய்?

சீசா :—ஒருவேளை இந்தப் பணம் எனக்கு வேண்டாம் என்று இராஜா சொல்லிவிட்டாலோ?

பானை :—இராஜா நம்மைத் தள்ளிவிடமாட்டான். பணக்காரன் வீட்டில் கொள்ளையடித்தால் ஆக்ஷேபிப்பார்கள்; இந்த வரி வேண்டாம், அந்த வரி வேண்டாம் என்று சண்டை பிடிப்பார்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பார்கள். திக்கற்ற ஏழைகள் வீட்டில் நாம் கொள்ளையடிக்கிறோ மாகையால் யாரும் கேட்பாரில்லை. கொள்ளைக்கும் குறைவில்லை; ஏழைகளுக்கும் வாயில்லை. சட்டசபையிலும் பணக்காரர்கள் பேச்சுதான். பத்திரிகைகளும், நம்ம வுஸ்கி, பிராந்தி விளம்பரங்களால் வருமானம் கிடைக்கும் வரையில் அதிகமாய்க் கூத்தாடமாட்டா. ஒன்றும் பயப்படவேண்டாம். தவிர நாம் கொள்ளையடிப்பது சுகமான வழி. நோவுபடுகிறவன்கூட வா, வா என்று நம்மை அழைக்கிறான்.

சீசா :—இராஜா நம்மை விட்டுவிட முடியாதா?

பானை :—இது உனக்குத் தெரியவில்லையா? தம்பீ? அரண்மனையில் ஒரு தடவை ஆரம்பித்த செலவு மறுபடியும் குறைக்க முடியாது. பணத்துக்கு வேறு எங்கே போவான்? நம்முடைய பணத்தைக்கொண்டு மந்திரிகள் நல்ல தருமங்கள் செய்கிறார்கள். கைத்தொழில்களைக் கெடுத்து சர்க்கார் வேலைக்குப் போட்டி போட்டு அலையச் செய்யும் பள்ளிக்கூடங்கள்; கெட்ட வழியில் சென்று நோய் சம்பாதித்துக் கொண்டவர்களுக்கு ஆஸ்பத்திரிகள்; உத்தியோகஸ்தர்களுக்கு அதிக சம்பளங்கள்; புதிய புதிய உத்தியோகங்கள்; அவர்களுக்குச் சம்பளத்துடன் விடுமுறைகள், வண்டிகள், வீடுகள், சீமைக்கு போய்வரச் செலவு. உத்தியோகஸ்தர்கள் எப்படியும் நம்முடைய கக்ஷியிலிருப்பார்கள். நமக்கு ஒன்றுமே பயமில்லை. நீ தைரியமாயிரு. நமக்காக அவர்கள்

எல்லோரும் பேசுவார்கள். நாம் சும்மா பானையிலும் சீசாவிலும் இருக்கவேண்டியதுதான். நம்முடைய வேலையை அவர்களே பார்ப்பார்கள்.

சீசா :—நீ சொல்லுவது உண்மைதான். அன்று ஒருவர் வயிற்றுக்குள் நானும் சட்டசபைக்குப் போயிருந்தேன். என்னைக் கொண்டுபோனவருக்குத் தூக்கம் வந்துவிட்டது. நான் நடந்த பேச்சையெல்லாம் உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். யாரோ ஒருவர் எழுந்து கள், சாராயம் நம் நாட்டுக்குப் பெரும் பகைவர்கள்; அவர்களைத் துரத்திவிட வேண்டும் என்றார். "அவசரப்படக் கூடாது", "முடியாது", "ஏழைகள் சாராயம் இல்லாமல் எப்படிப் பிழைப்பார்கள்", "இருபது வருஷங்களுக் குப்பின்", "உடனே எப்படி முடியும்", "அவர்களைத் துரத்துவது நியாயமில்லை" என்று பலவாறு மற்றவர்கள் எவ்வளவு அழகாகப்பேசினார்கள்.

பானை :—பார்த்தாயா! அவர்கள் உத்தியோகஸ்தர்கள் தானே?

சீசா :—ஆம். உத்தியோகஸ்தர்கள்தான். மற்றவர்களும் சிலர் சேர்ந்துகொண்டார்கள். பத்திரிகைகளிலோ நல்ல நல்ல பிராந்தி, வுஸ்கி, "வைத்தியர்களால் நன்கு மதிக்கப்பட்டது", "திடீர் என்று வியாதி வந்துவிடும்; வீட்டில் தயாராய் வைத்திருங்கள்" என்று விளம்பரங்கள் பெரிய பெரிய எழுத்தில் போட்டுக்கொண்டே யிருக்கிறார்கள்.

பானை :—நீ ஒன்றும் பயப்படாதே. ஆனால் உனக்கு ஒரு புத்தி சொல்லுகிறேன் கேள்: நீ என்னைப்போல் அடக்கமாயிருக்கிறதில்லை. உள்ளே போனவுடன் நீ போதை கொடுத்துவிடுகிறாய். அது கூடாது. அதனால்தான் எல்லாரும் உன்னைக் கண்டுகொண்டு வெறுக்கிறார்கள். என்னைப்பார்! எவ்வளவு நிதானமாய் அவசரப்படாமல் வேலை செய்கிறேன். அடக்கமும் காரியத்தில் கண்ணும் வேண்டும். கொள்ளையடிப்பதில் உன்னை விட நான் குறைந்தவனல்ல. ஆனால் நான் அவசரப்படுவதில்லை.

ரயிலில் போனால் என்ன, மாட்டு வண்டியில் போனால் என்ன? ஊர்போய்ச் சேருவது தானே வேண்டியது? குடியானவன் எங்கே ஓடிப்போவான்? ஒருதரம் குடித்தானானால் அவன் குடுமி நம் கையில் சிக்கிற்று. மறுபடியும் தானாகவே வருவான். அவசரம் என்னத்திற்கு? நீ என்னைப்போல் நடந்துகொள்ள வேண்டும்.



சீசா:—போய் வருகிறேன், அண்ணா. பெரியாயி மூதேவியை நான் நிரம்பக் கேட்டதாகச் சொல்லு. அதோ யார் அங்கே வருகிறது?

பானை:—அவன் கெட்டான், காந்தி நாடோடி! அவனிடம் நமக்கென்ன வேலை? நாம் போவோம்!

# கள் வந்த கதை

## ஒரு தெருக்கூத்து

### I

நெல் வயல்

அண்ணுமலை : [ஏரை நிறுத்தி மாட்டை அவிழ்த்த வாக்கில் தனக் குத்தானே பேசிக்கொள்கிறுன்.]

"அப்பனுக்கு வயது ஆகிவிட்டது. இனி வேலை செய்ய முடியாது பாவம். நானும் பழனியும்தான் எல்லாம் பார்த்துக் கொள்ளவேண்டும். தம்பி ரங்கனுக்கு மாரியாயி பார்த்துக் கண் போய்விட்டது. வீட்டிலேயே கிடக்கிறுன். இல்லாவிட்டால் தண்ணீர் இரைக்கவும், மாடு, கன்று பார்த்துக்கொள்ளவும், காட்டு வேலை தோப்புப் பார்த்துக்கொள்ளவும் மூன்று பேருக்கு வேலை சரியாயிருக்கும்."

துர்புத்தி (பேய்) :—(பின்னுல் நின்றுகொண்டு) அண்ணுமலை! குருட்டு ரங்கனுக்கு நீ ஏன் சோறு போட வேண்டும்? உன் பெண்சாதி, குழந்தைகள் உனக்குப் போதாவா?

அண்ணுமலை :—(திரும்பிப் பார்த்து யாரையும் காணுமல்) இதென்ன யாரோ பேசினுப்போலிருந்தது; ஆனுல் யாரும் காண வில்லை. ஒருவேளை வீட்டுக்காரி சோறு கொண்டுவந்தவள் இன்னும் கொட்டாய்க்குள் இருக்கிறுளா, என்ன? அடியே! யார் அங்கே?

[ஒருவரும் பதில் சொல்லவில்லை.]

அண்ணுமலை :—யாருமில்லை. என்னவோ நானே நினைத்துக் கொண்டேன்போலிருக்கிறது. பாவம் குருட்டுப் பையனுப் போய்விட்டான். அவனை நாம்தானே காப்பாற்றவேண்டும்? நமக்கு என்ன குறைவு. கடவுள் நல்ல மழை பெய்தார். கிணற்றில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. பயிர் நன்றுயிருக்கிறது. தென்ன மரங்கள் நன்றுய்க் காய்த்திருக்கின்றன. மாரியாயி கொண்டு

போனுள் அந்தப் பையன் கண்ணே. சரியாயிருந்தால் எப்பேர்ப் பட்ட ஆள்! மூன்று ஆள் வேலையை ஒருவன் செய்வான். அவனே நான்தான் காப்பாற்றவேண்டும். அதனுல் என்ன குறைந்து போகும்.

துர்புத்தி :—(பின்னுலிருந்து) இதென்ன வேதாந்தம்? ஒரு வருஷம் மழையில்லாமல் கிணறு வற்றிப்போய் வெள்ளாமை யில்லாமல் போனுல் பிறகு வேறு பாட்டுப் பாடுவாய்.

அண்ணுமலை :—(சுற்றும் முற்றும் பார்த்து) இதென்ன கிணறு வற்றிப்போகும் என்று யாரோ காதில் பேசுகிறுப்போலிருக்கிறது. பேயா? கறுப்பா? மந்திரமா? ஆள் யாரும் காணும்! ஆனுல் பேச்சு மாத்திரம் பேசுகிறது.

[மடியில் இருந்து திருநீற்றுப் பொட்டணம் எடுத்து முகத்தில் பூசிக்கொள்கிறுன்.]

துர்புத்தி :—(ஓட ஆரம்பித்து) அடே, பாவி! மடியில் திரு நீறு! உன் புத்தியை மாற்ற என்னுல் முடியாது.

## II

அண்ணுமலை வீடு.

அண்ணுமலை :—தாகமா யிருக்கிறது. கொஞ்சம் வெல்லம் போட்டுக் கரைத்துத் தண்ணீர் கொண்டு வருவாயா?

நல்லாயி :—(உள்ளே இருந்து வந்து) வெல்லம் எல்லாம் ஆய் விட்டதே! போன சந்தையில் தான்வாங்கினது, ஒரு எட்டுக்குத் தீர்ந்துபோய்விட்டது. நேற்று ஒரு கட்டி இருந்தது. இன்று பார்த்தால் காணும்.

கோபம் (பேய்) :—இப்போது என்ன செய்கிறுன் பார்ப் போம். இவன் மனைவியை, நேற்றுப் பானையை மூடாமல் மறதி யாய்ப் போகும்படி செய்தேன். எலி வந்து வெல்லத்தைத் தின்று விட்டது.

[கிட்டப்போய் அண்ணுமலை காதண்டை சொல்லுகிறது.]

உன் தம்பி ரங்கன் வீட்டிலேயே இருக்கிறுன். அவன்தான் தின்றுவிட்டிருக்கவேண்டும்.

அண்ணாமலை :—(பேயைக் காணாமல் மனைவியைப் பார்த்து) என்ன ரங்கனா தின்றுவிட்டான் என்கிறாய்? பாவம்! அவன் இருந்த இடத்திலேயே கிடக்கிறான். அவன்மேல் ஏன் பழி போடுகிறாய்?

நல்லாயி :—ஐயோ! நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே, உங்கள் மனதிலேயே தோன்றிற்றோ என்னவோ? ஏன் என் பேரில் பழி போடுகிறீர்கள்?

அண்ணாமலை :—சண்டை பிடிக்கலாகாது. நேற்று முதல் ஏனோ எனக்குப் புத்தி மாறாட்டமா யிருக்கிறது. கொஞ்சம் மோர்த் தண்ணீர் கொண்டுவா.

[மோர் குடித்துவிட்டுக் குழந்தையை மனைவியிடமிருந்து எடுத்துக் கொண்டு பாடுகிறான்.]

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே.



கோபம் :—(ஓடிக்கொண்டே) இதென்ன ஆபத்து. கோபம் தூண்டப்பார்த்தால், இவன் முருகனைத் துதிக்கிறான். நான் இங்கிருக்க முடியாது.

## III

## கலிபுருஷனின் அரண்மனை

[ஓர் அழகிய சிம்மாசனத்தின்மேல் கலிபுருஷன். சுற்றிலும் மந்திரியும் மற்றப் பிரபுக்களும்.]

ஆசை :—மகாராஜாவே! தங்கள் ஏவலாளர்கள் கணக்கு ஒப்புவிக்கக் காத்திருக்கிறார்கள்.

கலி :—நல்லது! ஒவ்வொருவராக முன் வரலாம்.

பொய் :—மகாராஜாவே! தங்கள் ஆணைப்படி நேற்று 10,235 ஆத்மாக்களை என் வலையில் போட்டுக்கொண்டேன்.

கலி :—நல்லது! நல்லது! நீ நல்ல தொண்டன்.

காமம் :—சுவாமி! என் வலையில் நேற்று 19,235 ஆண்களும், 8,468 பெண்களும் சிக்கினார்கள்.

கலி :—ஹா! நன்று, நன்று. நீதான் வேலைக்காரன்; உனக்குத்தான் முதல் பட்டம் அளிப்பேன்.

கோபம் :—மகாராஜா! நானும் என்னால் கூடியது செய்திருக்கிறேன். இதோ இவர்களைக் கட்டி யிழுத்து வந்திருக்கிறேன். அவர்களை நான் எண்ணவில்லை. எண்ண முடியவில்லை.

கலி :—யாரடா அங்கே! இந்த ஒற்றைக்கண் பயலுக்கு எண்ணக்கூடத் தெரியாது. நீங்கள் யாராவது கணக்கிட்டுச் சொல்லுங்கள்.

ஆசை :—மகாராஜாவே! நமக்குப் பணிந்த ஆத்துமாக்களை வகுப்புவாரியாகப் பிரிக்கவேண்டும். இல்லாவிட்டால், மகாராஜா! நம்முடைய அரசியலின் பலாபலம், முற்போக்கு முதலியவை நன்கு விளங்கா.

கலி :—சரி, சரி, நீ சொல்வது நல்ல யோசனை. ஒவ்வொருவரும் கூடியமட்டில் தத்தமக்குச் சிக்கினவர்களின் படிப்பு ஜாதி முதலியவைகளை எடுத்துக்காட்டுங்கள்.

பொய் :—நல்ல படித்தவர்கள், மேற்குலத்தவர்கள்தான், மகாராஜாவே! என் வலையில் விழுந்தார்கள்.

கலி :—வியாபாரிகள் சிக்கினர்களா ? அதுதான் எனக்கு வேண்டும்.

போய் :—ஆஹா ! அநேகமாய் அவர்களே.

ஆசை :—குடியானவர்கள் உண்டா ?

போய் :—(தலை வணங்கிக்கொண்டு) நிலம் உழுது பயிர் செய்கிறவர்கள், ஆனமட்டில் பார்த்தேன், என் வலையில் விழமாட்டேன் என்கிருர்கள். யாரும் சிக்கவில்லை. ஒருவர் இருவர் சிக்கினற்போலிருந்தது. உடனே எழுந்து காலை உதறித் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்கள், ஆண்டவனே !

கலி :—தொண்டனே ! உன் முயற்சி போதாது. நீ குடியானவர்களை எப்படியாவது உன் வலையில் பிடிக்கவேண்டும். ஒற்றைக் கண்ணு !

கோபம் :—சுவாமி !

கலி :—நீ பிடித்த ஆசாமிகள் யார் ? எவ்வகுப்பார் ?

கோபம் :—நல்ல பணக்காரர், அந்தஸ்து வாய்ந்தவர்கள் தான்.

கலி :—குடியானவர்கள் யாருமில்லையா ? அவர்களை நீ பிடித்தால்தான் கொலைபாதகங்கள் நன்ருய் நடக்கும்.

கோபம் :—எஜமானே ! சிலர் சிக்கினர்கள். ஆனல் சாரமில்லை. வெகு கஷ்டம் அவர்களைப் பிடித்து இழுத்து வருவது. நானே விட்டுவிட்டேன். எப்போதும் சிவ ! சிவ ! என்கிருர்கள்.

கலி :—காமமே ! நீ என்ன சொல்லுகிருய் ?

காமம் :—சுவாமி ! என்னல் ஆனமட்டில் பார்த்தேன், பணக்காரர்கள், வியாபாரிகள், தொப்பு தொப்பு என்று என் குழியில் விழுகிருர்கள். பாழும் பட்டிக்காட்டுக் குடியானவர்கள் என் பேச்சுக்கு முழுச் செவிடர்கள். கிட்ட நெருங்கி வருகிருர்கள். ஆனல் வலையில் சிக்குவதில்லை. எப்போதும் உழுவதும் வெட்டுவதும் பாடுபடுவதுமாகவே யிருக்கிருர்கள். அவர்களை என்னல் பிடிக்க முடியவில்லை.

கலி :—இதென்ன கதை ! சரியான யுக்தி யோசித்துக் கிராமவாசிகளையும் கொண்டுவரவேண்டும். கிராமவாசிகளில்லாவிட்டால்

நம் அரசாட்சி நிலைநிற்காது. இதற்கு நீ தக்க முயற்சி எடுக்க வேண்டும், மந்திரியே!

ஆசை :—ஆம்! ஆம்! குடியானவர்கள்தான் நமக்கு வேண்டும். இதற்குத் தக்க யோசனை செய்யப் போகிறேன்.

அனைவரும் :—அப்படியே, அப்படியே!

## IV

### கலி நகரம்

[ஆலோசனை சபையில் கள்ளைப்பற்றிப் பேச்சு நடந்தபின்

ஆசை :—இது உங்களுக்குத் தெரியவில்லையே!

போய் :—சரி, சரி, இப்போது விளங்கிற்று.



குடியானவனைக் கெடுக்க யோசனை.

கோபம் :—என்ன மடையர்கள் நாம்! இது ஏன் முன்னமேயே எங்களுக்குத் தோன்றவில்லை?

காமம் :—கலந்து யோசியாதது பிசகு. வாருங்கள் போவோம். இனி ஏன் தாமதம்?

## V

### ஊர்ச்சந்தி

[நாடு முழுவதும் நல்ல மழை பெய்து பூரண வெள்ளாமை. குடியானவர்கள் பிள்ளையார் கோயில்முன் தெருக்கூத்து போட்டிருக்கிறார்கள்.]

அண்ணாமலை :—அப்பா, முருகா!

[கூத்தாடி களைப்பாக உட்காருகிறான்.]

நாளை மாரியாயிக்கு ஒரு பொங்கல் ஊரில் வைக்கலாம்.

எல்லாரும் :—அப்படியே!

[பறையர்கள் கூட்டம் வருகிறது.]

பறையர் :— [ஒவ்வொருவராய்க் கும்பிடுகிறார்கள்.]

சாமி! சாமி! சாமி!

அண்ணாமலை :—என்ன சாம்பா! ஏன் எல்லாரும் வந்தீர்கள்?

சாம்பான் :—சாமி! எங்களுக்கு வீட்டுக்கு ஒரு மிடா எள்ளு உத்தரவு பண்ணவேண்டும். வீட்டுக்குப் பத்து தேங்காய் உத்தரவு பண்ணவேண்டும். உங்கள் அடிமைகளும் கோயிலுக்குப் போய்ப் பொங்கல் இடவேண்டும்.

அண்ணாமலை :—சரி! இதற்கு என்ன வந்தது? வானம் மழை பெய்து நல்ல வெள்ளாமை சுவாமி தந்தார். எல்லாரும் சுவாமி கொடுத்தது சாப்பிடவேண்டியதுதான். பெரிய ஊர் கவுண்டனிடம் சொல்லிப் பேசி, பறையர் எல்லாருக்கும் எள்ளும் தேங்காயும் வெல்லமும் கொடுக்கச் சொல்லலாம், போ!

[பறையர் கும்பிட்டுப் போகிறார்கள்.]

## VI

### அண்ணாமலையின் தோட்டம்

[ஆசைப் பேய் ஒரு பண்ணையாள் வேஷம்பூண்டு வீரன் என்று பெயர் கொண்டு அண்ணாமலையின் பண்ணையில் சேர்ந்திருக்கிறான்.]

அண்ணாமலை :—வீரா! தம்பியுடன் போய்த் தேங்காய் எல்லாம் எடுத்துக் கொட்டாயில் போடு.

ஆசை :—அப்பனே, அப்படியே! ஆனால் கொட்டாய் பிடியாது. தேங்காய் கொட்டாய்க்கு மூன்று பங்கிருக்கிறதே! உள்ளே எல்லாம் போடமுடியாது.

அண்ணாமலை :—சரி! வெளித் திண்ணையில் கிடக்கட்டுமே!

ஆசை :—அதெப்படி? அப்பனே, யாராவது கொண்டு போய்விடுவார்கள். எருப்போட்டுக் கஷ்டப்பட்டு விளைந்ததைப் பத்திரப்படுத்தாமல்போனால் திருடன் எடுத்துப் போய்விடுவான்.

அண்ணாமலை :—இதுவரை நான் அப்படிச் செய்தது கிடையாது. நீ சந்தேகப் பேர்வழியா யிருக்கிறாய். சரி! வீட்டுக்குக் கொண்டுபோய்ப் புறக்கடையில் போட்டு வையுங்கள். பிறகு சந்தைக்குக் கொண்டுபோய் விற்றுவிடலாம்.

ஆசை :—சந்தையில் அரையணாவுக்கு ஒரு தேங்காய் கேட்கிறார்கள். ஓரணாத் தேங்காயை அரையணாவுக்குக் கொடுத்து விடுகிறதா? அநியாயம்!

அண்ணாமலை :—வேறு என்ன செய்வது?

ஆசை :—இந்தத் தேங்காயின் தொல்லையே இப்படி. இதற்கு வேறே ஒரு காரியம் செய்தால் நல்லது. ஆனால் நீங்கள் அதைச் செய்யமாட்டீர்கள்.

அண்ணாமலை :—என்ன சொல்லு, பார்ப்போம், எனக்குத் தெரியாத விவசாயம். நீ சொன்ன எரு நன்றாய்த்தான் பிடித்தது. நல்ல வெள்ளாமையாயிற்று. இந்தத் தென்ன மரங்களைப்பற்றி ஏதோ நல்ல வழி இருக்கிறதென்று அடிக்கடி சொல்லுகிறாயே. என்ன சொல் பார்க்கலாம்.

ஆசை :—உண்டு எஜமானே! இதை நான் தெற்கே கற்று வந்தேன். எல்லாருக்கும் சொல்லி விடக்கூடாது.

அண்ணாமலை :—நல்லது, சொல், யாருக்கும் சொல்ல மாட்டேன்.

ஆசை :— [கிட்ட வந்து]

தென்னமரம் காய் காய்ப்பது தவிர அதனுள்ளே பூமியிலிருந்து மேல் ஏறிச்செல்லும் அமிருதம் ஒன்றுண்டு. அதைச் சும்மா

விட்டுவிட்டால் காயாய்ப் போகிறது. அப்படி விடாமல் அதைக் குடத்தில் இறக்கிப் பதஞ்செய்தால் ஒரு நல்ல பானமாகும். அதை ஒருதரம் குடித்தால் பிறகு வேறு எதுவும் வேண்டாம்!

அண்ணாமலை :—அதென்ன அவ்வளவு தித்திக்குமா? அதன் பெயர் என்ன?

ஆசை :—அதுதான் கள். தித்திப்பா? அது தேவாமிருதம்! வெல்லம் தித்திக்கும். கள் தித்தியாது: அதற்கு மேலான ஆனந்தம். கள்ளுக்குச் சமானமாக எதைச்சொல்வேன்? அது கிழவனுக்கு இளமை கொடுக்கும்; தூக்கம் வரமாட்டேன் என்றால் தூங்கிவிடும்படி செய்யும். களைப்பாயிருந்தால் பலம் கொடுக்கும். மனம் வாடின மாதிரி யிருந்தால் உற்சாகம் கொடுக்கும். பயங் காளிக்குத் தைரியங் கொடுக்கும். விசனமா யிருந்தால் சந்தோஷங் கொடுக்கும். கள்ளைத்தான் தேவாமிருதம் என்று முற்காலத்தில் சொன்னது.

அண்ணாமலை :—இதென்ன கதை! பொய் சொல்லாதே.

ஆசை :—இல்லை எஜமானே! வேண்டுமானால் நீங்கள் பாருங்கள், செய்து காட்டுகிறேன்.

அண்ணாமலை :—அப்படியே சரி. உடனே செய்து காட்டு பார்க்கலாம். இதற்கு என்ன வேண்டும்?

ஆசை :—ஒன்றுமில்லை; ஒரு குடம், ஒரு கத்தி, இவை தான் வேண்டும். வாருங்கள் காட்டுகிறேன்.

## VII

### சுடுகாடு

துர்புத்தி :—அதோ வருகிறார்! எஜமான் வருகிறார்!

போய் :—வெகு நேரமாயிற்று. பொழுது விடிந்து போகும் போலிருக்கிறது. நல்ல வேளை, வந்தாரே.

[ஆசை வருகிறான்]

எல்லாரும் :—வாருங்கள் எஜமானே!

ஆசை :—நல்லது, என்ன விசேஷம்?

போய் :—ஒன்றுமில்லை. உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம். குடியானவன் சங்கதியென்ன?

ஆசை :—எல்லாம் முடிந்தது. இனி நீங்கள் வலை போட வேண்டியதுதான் வேலை!



மரத்தில் கள்குடம் கட்டியாய்விட்டது.

கோபம் :—என்ன! என்ன! திருநீறு சட்டி திருடி விட்டீர்களா?

ஆசை :—அதென்னத்திற்கு? மரத்தில் குடம் கட்டியாய் விட்டது. இனி உங்கள் வேலை ஓடுகிற ஓட்டம்.

காமம் :—கள் குடித்துவிட்டானா? இப்போது என்ன சொல்லுகிறான்?

**ஆசை** :—நாளையெல்லாம் தயாராகிறது. அதற்குமேல் நான் சொல்லவேண்டுமா!

**எல்லாரும்** :—சரி! சரி! [எல்லாரும் கூத்தாடுகிறார்கள்.]

## VIII

### தோப்பில் மரத்தடி

[ஒரு குடம் நிறையக் கள், ஒரு மொந்தை, ஒரு இலையில் பணியாரம்]

**அண்ணாமலை** :—[கையில் மொந்தை பிடித்துக்கொண்டு] இதைக் குடிக்கலாமா வீரா? பாவம் இல்லையா?



"தைரியமாய்க் குடியுங்கள்."

ஆசை :—பாவமா? இதென்ன கேள்வி! கடவுள் கொடுத்த பண்டத்தைக் குடிப்பதில் என்ன பாவம்? திருடினோமா? அடித்துப் பிடுங்கினோமா? தைரியமாய்க் குடியுங்கள்!

அண்ணாமலை :— [வாயில் மொந்தை வைத்து மறுபடியும்] வேண்டாமடாப்பா! என்னவோ பயமாயிருக்கிறது. அப்பனைக் கேட்கலாம்.

ஆசை :—சீ! பயப்படாதே! அப்பனை என்ன கேட்கிறது? நம்ம மரத்தில் உண்டான தண்ணீருக்கு என்ன பலரைக் கேட்கிறது.

அண்ணாமலை :— [குடிக்கிறான்] அப்பா! இதென்ன இப்படியிருக்கிறது! [மறுபடியும் குடிக்கிறான்] அப்பா!

ஆசை :—பயப்படவேண்டாம், குடியுங்கள். இதோ பாருங்கள் நான் குடிக்கிறேன்.

[ஆசை குடிக்கிறான்.]

அண்ணாமலை :— [மறுபடியும் குடிக்கிறான்] வரவர நன்றாயிருக்கிறதடா!

ஆசை :—அதன் வேலை கொஞ்ச நேரத்தில் தெரியும்; பணியாரம் தின்னுங்கள்.

## IX

அண்ணாமலை வீடு: காலை 8 மணி

அண்ணாமலை :—அடே பழனியாண்டி! அந்தக் குடம் கொண்டுவா!

பழனியாண்டி :—இதென்ன! அண்ணன் காலையிலும் இரவிலும் கணக்கில்லாமல் குடிக்கிறானே!

நல்லாயி :—ஐயோ! கெட்டோமே!

அண்ணாமலை :—என்னடா முணுமுணுக்கிறாய்? சொன்னால் கேட்கமாட்டாய், பயலே!

[போய்த் தம்பியை ஒரு உதை உதைக்கிறான்.]

பழனியாண்டி :—அப்பா! செத்தேன்.



நல்லாயி :—இதென்ன காலையில் இப்படி ரகளை பண்ணுகிறீர்கள். இந்தாங்கோ திருநீறு. கோயிலுக்குப் போகலாம்.

[அண்ணாமலை திருநீற்றுச் செப்பை வாங்கி உடைத்துப் போடுகிறான்.]

அண்ணாமலை :—நீ கெட்டாய், சோம்பேறி நாய்! தாகம் தவிக்கிறது! என்னவோ கோயிலாம்! கொண்டுவா, அந்தக் குடம்.

நல்லாயி :—ஐயோ வேண்டாம், இந்தாங்கோ மோர். தண்ணீர்த் தாகமானால் மோராவது தண்ணீராவது குடியுங்கள்!

[மோர்ச் செம்பை அண்ணாமலை வாங்கி மனைவி தலையில் இடிக்கிறான்.]

ஐயையோ! ஐயையோ!

கோபம் :— [கூத்தாடிக்கொண்டு வருகிறான்.]

சிக்கினையா, வெள்ளாளா! சிவ சிவாவை மறந்தாயா! திருநீற்றைக் கொட்டினையா!



குடிகாரன் வீட்டில் கலகம் : கலிதூதனுக்கு ஆனந்தம்.

## X

### கலிபுருஷன் அரண்மனை

கலி :— [சிம்மாசனத்திலிருந்து] என்ன, மந்திரியே! என்ன செய்தி? நாடு எப்படி நடக்கிறது?

ஆசை :—காரியம் ஜயமாயிற்று, அரசனே! குடியானவர்கள் எல்லாரும் மகாராஜாவுக்கு ஆதீனமாய்விட்டார்கள்.

கலி :—இவ்வளவு சீக்கிரமா! அதெப்படிச் செய்தாய்?

ஆசை :—ஒன்றுமில்லை. பண்ணையாளாய்ப் போயமர்ந்தேன். குடியானவர்களுக்குக் கள் குடிக்கக் கற்றுக்கொடுத்துவிட்டேன். பிறகு எல்லா வேலையும் தானாகவே நடக்கிறது. குடிகள் எல்லாரும் இப்போது கள் குடிக்கிறார்கள். அண்ணனும் தம்பியும் சண்டை போடுகிறார்கள். தாய் தகப்பன்மாரை மக்கள் அடித்துத் துரத்துகிறார்கள். வீட்டில் மனைவி நன்றாய் உதைபடுகிறாள். பேராசை பெருகி நிற்கிறது. எல்லாரும் சோற்றுக்கு நன்றாய்த் தவிக்கிறார்கள். கற்பு என்பது பழைய பேச்சாயிற்று. திருட்டும்

கொலையும் நன்ருய் நடக்கின்றன. நம்முடைய அரசாட்சிக்குக் குறை யொன்றுமில்லை.

கலி :—அப்படியா, என் அருமை மந்திரியே! எங்கே நம்முடைய தொண்டர்கள்?

ஆசை :—வெளியே வாயிலில் வந்து காத்துக்கொண்டிருக்கிருர்கள். உள்ளே வரச்சொல்லலாமா?



" காரியம் ஜயமாயிற்று."

கலி :—ஆம் வரலாம். அவர்களுக்கு நல்ல வெகுமதிகள் கொடுக்கலாம்.

[பொய், காமம், கோபம் முதலிய
பேய்கள் கூத்தாடிக்கொண்டு
வருகின்றன.]

## XI

### அலங்கரித்த மண்டபத்தில் மகாத்மா காந்தி படம்

[திரையின் பின்னிருந்து பல பெண்
குரல்கள் ஒன்று சேர்ந்து]

குருநாதா! இந்தக் கள் வேதனை எப்போது நீங்கும்? இந்தக் கலியரசு எப்பொழுது போகும்?

[மங்கல மணியோசை.]

# கலால் வருமானம்

நம்முடைய சென்னை மாகாணத்தில் கள்ளுக்கும் சாராயத்திற்கும் ஏழை மக்கள் கொடுக்கும் பணம் எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள்? வருஷம் ஒன்றுக்கு 20,00,00,000க்கு குறைவில்லை. அப்பணத்திற்கு நல்ல அரிசி வாங்கினோமானால் தினம் ஒன்றுக்கு ஒவ்வொரு ஜில்லாவில் 1,000 மூட்டை வாங்கிப் போடலாம். 40 லக்ஷம் பேருக்குப் பசிதீரச் சோறு போடலாம்.

## மத்யாஸுரன்

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒருநாள் தவறாமல் பொழுது விடிந்தவுடன் 1,000 மூட்டை அரிசி ஏழைகள் வயிறு நிறையச் சாப்பிடக்கூடிய பொருள் இம்மாதிரி கள்ளிலும் சாராயத்திலும்



கள் என்னும் பகாசுரனும் அவன் தினசரி சாப்பாடும்.

நாசமாய்ப்போய் வருகிறது. பஞ்சம் பீடித்துவரும் நமது நாட்டில் மதுபானம் என்னும் கொடிய அரக்கனை இவ்வண்ணம் ஸ்வேச்சையாய் ஜனங்களைக்கொல்ல விட்டிருக்கிறோம். பீமன் வதைத்த

பகாசுரன் ஒரு வண்டி சோறுதான் கேட்டான். இந்த மதுபானமென்னும் பகாசுரனுக்கு நாள் ஒன்றுக்கு 1,000 மூட்டை அரிசி சமைத்துக்கொண்டுபோய் வைக்கிறோம்! பழய பகாசுரன் எப்படிச் சோறு கொண்டுவந்த ஆளையும் வண்டிமாடுகளையும்கூட விழுங்கிவந்தானோ அப்படியே இந்த மத்யாஸுரனும் ஏழைகளின் சோற்றுடன் அவர்கள் தேகத்தின் இரத்தத்தையும் குடும்ப வாழ்வையும் ஒழுக்கத்தையும் ஆன்மாவையும்கூடப் பலி கொள்கிறான்.

பழய பகாசுரன் ஒருவனே இருந்தான். இப்போது இந்த 1,000 மூட்டை தின்னும் கள்ளசுரன் கிராமம் ஒன்றுக்கு ஒருவன் இருந்து வருகிறான். இவர்களை யெல்லாம் வதைத்து நம்மை விடுவிக்க வல்ல குந்தி புத்திரன் நமக்கு வேண்டுமே!

## மகா பாரதத்தி லில்லாத சில விவரங்கள்

பகாசுரன் கதையை மகா பாரதத்தில் படித்திருக்கிறீர்கள். அதிலில்லாத சில விவரங்களை நான் சொல்லுகிறேன் கேளுங்கள். "பகாசுரனைத் தொலைத்து விடலாமே!" என்று குந்திதேவி சொன்னபோது அந்த ஏகசக்கிரபுரத்தில் சிலர் ஆக்ஷேபித்தார்களாம். "இந்த பகாசுரன் கொடியவன்தான். நம்மை வருத்தி நம்முடைய அன்னத்தையும் அருமை மக்களையும் தின்று வருகிறான். ஆனால் அந்த அசுரனுடைய மலமூத்திரத்தினால் நம்முடைய வயல்களுக்கு நல்ல உரம் உண்டாய் வருகிறது. அவனைத் தொலைத்துவிட்டால் இது நின்றுபோய்விடுமே! அதன்பிறகு நம் வயல்களுக்கு எரு எங்கே தேடுகிறது? பகாசுரனை இப்போது திடீர் என்று வதைக்கவேண்டாம். நம்முடைய பண்ணைகள் கெட்டுப்போகும். தவிர இந்த பகாசுரனைக் கொன்றால் வேறு அசுரர்கள் வரமாட்டார்கள் என்பது என்ன உறுதி? காட்டிலுள்ள அரக்கர்களை யெல்லாம் வதைத்து விட்டோமா?" என்று அவ்வூரார் சிலர் வாதாடினார்களாம். அவர்கள் சொல்லுவதும் உண்மைதான் என்றே ஏகசக்கிரபுரத்தின் ஊர் அதிகாரிகளும் நினைத்தார்களாம்!

இப்போது இந்தக் கள்ளுக்கும் சாராயத்திற்கும் ஏழைமக்களின் பணத்தைக் குவியல் குவியலாக தினமும் பலிகொடுத்து,

பகாசுரனுடைய மலமூத்திரத்திற்கு ஒப்பான கலால் வரியைக் கண்டு மோகித்து, இவ்வருமானம் இல்லாமல்போனால் எப்படி அரசாங்கம் நடைபெறுமென்று அரசாங்கத்தாரும் அவர்களைச் சேர்ந்த சிலரும் ஆக்ஷேபிக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டம் செய்து கடைகளை யொழித்தாலும் திருட்டுச் சாராயம் காய்ச்சு வார்கள், குடிகாரர்கள் திருட்டுத்தனமாய்க் குடிப்பார்கள், ஆகை யால் மதுபானத்தை நிறுத்தமுடியாது என்றும் சொல்லிவருகிறார் கள். இந்த ஏகசக்கிரபுர அவித்தையை என்னென்று சொல்ல லாம்! திருட்டுத்தனமாக எத்தனை பேர் எத்தனை நாள் குடிக்க முடியும்?

கலிகால பகாசுரனாகிய மதுபானத்தை ஒழித்தோமானால் தினம் தவறாமல் நாள் ஒன்றுக்கு, ஜில்லா ஒன்றுக்கு, 1,000 மூட்டை அரிசி நாசமாகாமல் ஏழைகள் வீட்டிலேயே இருக்கச் செய்வோம். அதை அவர்கள் உண்டு, நல்வாழ்வு கெடாமல் பிழைப்பார்கள். நாளுக்குநாள் நாடு எவ்வளவு செழித்து ஓங்கும்!

கள் கடைகள் ஒழிந்து கள் விற்பதும் குடிப்பதும் குற்றம் என்று ஏற்பட்டுவிட்டால் பிறகு பாரதநாட்டின் இயற்கை தருமம் நிலைபெற்று நிற்கும். முன்காலத்தில் இப்போதுள்ள கட்குடி யிருந்ததா? இல்லவே யில்லை யென்பதற்குச் சரித்திரக்காரர்களே சாக்ஷிகளாவார்கள். பாரதநாட்டில் நல்லொழுக்கம் என்பது இயற்கை. கடைகளை ஒழித்தால் கட்குடி ஒழியும்.

### சுடுகாட்டு வருமானத்தை விடாத ராஜாவின் கதை.

இன்னொரு கதை சொல்லுகிறேன், கேளுங்கள். "இந்தக் கலால் வருமானம் 5 கோடி ரூபாய். இதை விட்டுவிட்டால் நமக்கு வழியென்ன?" என்று அதிகாரிகள் கேட்பதற்கு இந்தக் கதை பதிலாகும்.

ஒரு தேசத்தில் பெருமாரி வியாதி வந்து பிடித்துக்கொண் டிருந்தது. அந்தக் கொடிய வியாதியானது ஏழைகளையே தாக்கி வந்தது. இப்படி அநேக ஆண்மக்கள் இறந்து ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளானார்கள். புருஷனை இழந்த பெண்கள்

தலை மயிர் எடுத்துவிடுவது வழக்க மல்லவா? துக்கத்தில் மூழ்கிக் கிடந்த அத்தேசத்தாருக்கு ஒரு அரச னிருந்தான். இவன் கைம்பெண்களுடைய தலைமயிரை யெல்லாம் வீணுக்கா மல் சேர்த்துக் கொண்டுவர உத்தரவிட்டான். அரசனுடைய ஆட்கள் தினந்தோறும் மயிரையெல்லாம் வண்டியில் போட்டுக்கொண்டுவந்து அரசனிடம் சேர்ப்பார்கள். வருஷா வருஷம் அவன் அதை ஏலம் போட்டு அரண்மனைச் செலவுக்குப் பணம் சேர்த்துவந்தான். திருப்பதியில் சுவாமிக்குக் கொடுத்த தலை மயிரை ஏலத்தில் விட்டு வருமானம் பெறுவது அறிந்திருப்பீர்கள்.

மகாமாரி வியாதியை நிறுத்த சில நல்ல வைத்தியர்கள் யோசனைசெய்து மருந்து கண்டுபிடித்தார்கள். "ஏன் ஜனங்கள் வீணாய்ச் சாகவேண்டும்? இந்த மருந்தைச்செய்வித்துக் குடிகளுக்குக் கொடுங்கள்" என்று அரசனிடம் அவர்கள் போய் விண்ணப்பம் செய்தார்கள். அதைக் கேட்ட அரசன் அமைச்சர்களிடம் யோசனை செய்து சொல்லியதாவது: "வைத்தியர்கள் கூறுவது உண்மையே. மருந்து நல்ல மருந்துதான். ஆனால் விதவைகளின் தலைமயிர் ஏலம் போடுவதில் நல்ல வருமானம் அரண்மனைக்கு வருகிறதே. அதை நம்பி நாம் செலவு திட்டம் செய்திருக்கிறோம். அதை நிறுத்த முடியாது. இப்பொழுது இந்த யோசனை சொல்லாதீர்கள்" என்றான்! "அரசன் சொல்லுவது உண்மைதான். அரண்மனைச் செலவுக்கு என்னசெய்கிறது?" என்று அமைச்சர்களும் வைத்தியர்களிடம் சொல்லி சமாதானப்படுத்தி யனுப்பினார்கள்.

கலால் வருமானம் மயானத்தில் குவிந்த கைம்பெண்களின் தலைமயிர் என்றே சொல்லலாம். புருஷனை யிழந்து துக்கத்தில் மூழ்கிக்கிடந்த ஸ்திரீகளின் நிலைதான் இந்தக் கள்ளினால் குடும்பங் கெட்டு வாழ்வு கெட்டு அலையும் ஏழைத் தாய்மார்கள், அநாதைக் குழந்தைகளின் நிலை. கள்ளும் சாராயமும் எவ்வளவு குடிகளைக் கெடுத்துப் பெண்டுபிள்ளைகளின் கண்ணீராய் வடிகின்றன! பதின் மடங்கு நஷ்டம் குடிகள் அடையும்பொழுது, அவர்கள் நாசமாக்கும் பணத்தில் ஒரு பாகம் தங்களுக்கு வருமானமாக வருகிறதே, அதை எப்படி விடுவது என்று அரசாங்கத்தார் சொல்லுவது,

அழுத கண்ணீரால் நனைந்து கிடக்கும் அநாதைப் பெண்களின் தலைமயிரை விற்பது போலவே! இக்கதை கடுமையான உபமானம் தான். ஆனால் உண்மையல்லவா பாருங்கள்! இந்தக் கலால் வருமானத்தைக் கண்டு மோகித்து ஏழைகள் குடித்துக் கெட வேண்டியதுதான் என்று சொல்லுவது பெரிய மாயாவாதம்.



புருஷனை இழந்தவர்கள் களைந்த தலைமயிரை ஏலம்போட்டு அரண்மனைச் செலவு நடக்கிறது.

புதிய வரிகள் போட ஒப்புக்கொண்டால் சள்ளை நிறுத்துவார்களாம்! நல்ல யோசனை! ஒரு கிழவி ஓட்டைக் குடத்தைக் கட்டிக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் இழுக்கப் பார்க்கிறாள். நாள் முழுதும் ஓயாமல் இழுத்தாலும் தண்ணீர் இல்லை. இதற்கு என்ன செய்கிறது என்று கயிறும் கையுமாய்க் கிழவி வருத்தமுற்று நிற்கிறாள். பக்கத்தில் அளவுகோல் கையில் பிடித்துக்கொண்டு நின்ற ஒரு ஒட்டன், "பாட்டி, பாட்டி, இதற்கு ஏன் வருத்தப் படுகிறாய்? கிணறு ஆழமாய் வெட்டவேண்டும். அப்போது வேண்டிய தண்ணீர் கிடைக்கும். ஒரு பெட்டு வெட்ட எனக்குக் கெஜம் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய் கொடு. நான் வெட்டித்

தருகிறேன்'' என்கிறுன். இதுதான் புதுவரி யோசனை. குடத்தில் பெரும் பொத்தல் வாய்திறந்துகொண்டு கிடக்கிறது. இராணுவச் செலவு, பெரிய பெரிய சம்பளங்கள், வீண் இலாகாக்கள், வேண்டாத சிப்பந்திகள், வருஷம் தவருமல் புதிய சட்டடங்கள், இவைகள் வழியாய், கிழவியின் ஒட்டைக்குடத்தில் எடுத்த நீரைப்




புதியவரி யோசனை: குடத்தில் ஒட்டை, கிணற்றை வெட்ட வேண்டுமாம்.

போல் வரிப்பணம் ஒழுகிப்போய் வருகிறது. பொத்தலை மூடாமல் கிணறு வெட்ட யோசனை! கிணறு வெட்டும் போயனுக்குக் கொடுக்க நம்முடைய கிழவி வீட்டில் பணமில்லை; கிணற்றடியிலும் பாறை, இனி வெட்டியும் பயனில்லை!

கள்ளைத் தொலைக்கும் போரில் எல்லாரும் சேருங்கள். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு தெருவிலும் மதுவிலக்குச் சங்கம் கூட்டுங்கள்.

முற்றிற்று.

# கள்ளினின்று விடுதலை

[பாரதியார் "விடுதலை"ப் பாட்டின் இசை]

## விடுதலை, விடுதலை, விடுதலை

பெருமைவாய்ந்த பரதமக்கள் யாவருக்கும் விடுதலை !
வறுமைவலையி லலையுமேழை யெங்களுக்கும் விடுதலை !
தருமம்கெட்டு நரகம்தள்ளும் தீயகள்ளையாவரும்
தூரத்தள்ளி நன்குவாழ்வம் நாமுமிந்த நாட்டிலே.

[விடுதலை

நீசனென்றும் குடியனென்றும் எவனுமில்லை ஜாதியில்
மோசம்செய்யும் கள்பிசாசை நாட்டினின்று ஓட்டுவோம்
காசுசேர்த்துக் கவலையின்றி மக்களோடு வீட்டிலே
மனமகிழ்ந்து மோரும் பாலும் சோறுமுண்டு வாழ்வமே.

[விடுதலை

போதைகொண்டு பலருமேச மானங்கெட்டுத் திரிவதேன் ?
பாதகங்கள் ஐந்தையும் பெற்றகள்ளைத் தள்ளுவோம்
மாதர் வயிற்றில் தீயைமூட்டும் கொடிய கடையை மூடுவீர்
சூதுசெய்து நாசமாக்கும் கள்ளினின்று தப்புவோம்.

[விடுதலை

ஹிந்தி பிரசார அச்சுக்கூடம், சென்னை.

தம்பீ, கேள்!

கள்ளுக்கடை பக்கம் போகவேண்டாம். பால், தயிர், மோர், கஞ்சி, சோறு, களி, அப்பம், தோசை, இட்டிலி, ரொட்டி, எது தின்றாலும் உடம்புக்கு பலம் கொடுக்கும். கள்ளும் சாராயமும் உன் தேகத்தில் உள்ள இரத்தத்தையும் பலத்தையும் தின்று கொன்றுவிடும்.

கள் குடித்தால் உன் கஷ்டம் நீங்காது. புத்தி மாராட்டமாகச் செய்துகொள்ளுவதில் ஒரு நன்மையுமில்லை. கள் அல்லது சாராயம் குடித்தால் தேகத்திற்குப் பலம் என்றும், வியாதி சொஸ்தப்படும் என்றும் யாராவது சொன்னால் அதை நம்பாதே. அது சுத்த பொய். தெரியாமையால் சிலர் இப்படிச் சொல்லுவார்கள். அதை நம்பி கெட்டுப்போகாதே.

நீ எந்த ஜாதியானாயிருந்தாலும் கள் சாராயம் குடிக்கக்கூடாது. குடிப்பது பாவம். உன் மக்கள் கெட்டுப்போவார்கள். குடும்பம் கெட்டுப் போகும். இதுவரை குடித்திருந்தாலும் இனிமேல் விட்டு விடலாம். கள்ளின் கியாபகம் வந்தால், வேறு எதாவது ஒரு வேலை செய்: சுவாமியை நினைத்துக்கொள்: குழந்தைகளுடன் விளையாடு: அந்த கெட்ட எண்ணம் நீங்கும்.

கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசை வீணாக்காதே. கள்ளுக்கும் சாராயத்திற்கும் போடும் பணம் வீண். அரிசியோ, கம்போ, கேழ்வரகோ வாங்கி வீட்டில் வைத்தால் அந்த காசு நல்ல உபயோகமாகும். கள்ளுக்கடை கியாபகம் வந்தால் கையில் உள்ள காசை தாமதியாமல் உன் மனைவி அல்லது தாயாரிடம் கொடுத்துவிடு.



இனி கள், சாராயம் எதுவும் தொடமாட்டேன்
சுவாமிமுன் சத்தியம் செய்கிறேன்.